ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2029/2 - 2017 ජූලි මස 24 වැනි සඳුදා - 2017.07.24

2029/2 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: 4/1/5/18.

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/4/2012/ D/297.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில், திரகந்தகய மேற்கு கோறளை, இல. 817, ஹெரலியாவல கிராம அலுவலர் பரிவில், ஹெரலியாவல கிராமத்தில் அமைந்துள்ள, குருநாகல் சிரேஸ்ட்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2017.04.26 ஆந் திகதிய கு 2352 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 01 முதல் 02 வரை காட்டப்பட்ட 10.1175 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க் காணும் காணித் துண்டுகள்.

**1. துண்டு இலக்கம் 01**

காணியின் பெயர்: ஹெரலியாவலவத்தை; விபரம்: வீட்டுத்தோட்டம், சுமார் 5-50 வருட வயதிலான 219 தென்னை மரங்கள், சுமார் 8-50 வருட வயதிலான 29 தேக்கு மரங்களுடனான பயிர்ச் செய்கை 14 நிரந்தரக் கட்டிடங்கள், தற்காலிகக் கட்டிடம், அத்திவாரமொன்று கழிவறை, 02 நீர்த் தாங்கிகள் மற்றும் சீமெந்தினால் கட்டப்பட்ட கிணறு காணப்படு கின்றன; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: காணி சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 2.7366 ஹெக்டயார்.

**2. துண்டு இலக்கம் 02**

காணியின் பெயர்: ஹெரலியாவலவத்தை; விபரம்: வீட்டுத்தோட்டம், சுமார் 5-50 வருட வயதிலான 723 தென்னை மரங்கள், சுமார் 8-50 வருட வயதிலான 41 தேக்கு மரங்களுடனான கலப்புப் பயிர்ச் செய்கை, சுமார் 10-6-0 வருட வயதிலான 9 தென்னை மரங்களுடனான பயிர்ச் செய்கை, 4 நிரந்தரக் கட்டிடங்கள், தற்காலிகக் கட்டிடம் மற்றும் அத்திவாரம் காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்:

காணி சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 7.3809 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு குருநாகல் பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஈ. எம். எம். எஸ். ஏக்கநாயக்க,
பிரதேச செயலாளர்,
குருநாகல்.

பிரதேச செயலகம்,
குருநாகல்,
2017, யூலை 18.

8 - 246

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.